**ஏப்ரல் – 18**

# TNPSC துளிகள்

- இந்திய விண்வெளி நிறுவனமான இஸ்ரோ நிறுவனம் பிரான்சின் விண்வெளி நிறுவனமான CNES அமைப்புடன், மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் திட்டமான ககன்யானுக்காக இணைந்துப் பணியாற்றுவதற்காக ஒப்பந்தம் ஒன்றினில் கையெழுத்திட்டுள்ளது.
    - CNES நிறுவனம் பிரான்சின் பயிற்சித் தளங்களில் இந்திய விமானப் பொறியியலாளர்கள் மற்றும் CAPCOM திட்டக் கட்டுப்பாட்டுக் குழுவினர் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும்.
- தேசியப் புத்தாக்க நிறுவன ஆலோசனை மன்றத்தின் (National Startup Advisory Council - NSAC) முதல் சந்திப்பானது சமீபத்தில் நடைபெற்றது.
    - இது தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையினால் (DPIIT - Department for Promotion of Industry and Internal Trade) அமைக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, முதன்முறையாக ஐ.நா. உணவு அமைப்புகள் உச்சி மாநாட்டினை 2021 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
    - இந்த உச்சி மாநாட்டில் இந்தியா தேசிய அளவிலான ஒரு பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும்.
- சர்வதேச நாணய நிதியமானது சமீபத்தில் துணை சஹாரா ஆப்பிரிக்கப் பகுதிகளுக்கான பிராந்திய பொருளாதாரக் கண்ணோட்டத்தை வெளியிட்டது.
    - இந்த அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் மெதுவான வளர்ச்சியினை இப்பகுதி காண உள்ளது.
- தேசியப் புலனாய்வு அமைப்பானது BRICS நாடுகளுடன் இணைந்து தீவிரவாதிகள் இணைய தளங்களைத் தவறாக பயன்படுத்துதல் (Misuse of Internet by terrorists) எனும் தலைப்பில் ஒரு காணொலி நிகழ்வை சமீபத்தில் ஏற்பாடு செய்தது.
    - 2021 ஆம் ஆண்டிற்கான BRICS அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இந்தியா வகிப்பதால் இந்தக் கருத்தரங்கினை இந்தியா நடத்தியது.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஜோர்டனின் ஹேஷ்மைத் பேரரசின் இரண்டாம் அப்துல்லாவிற்கும் மற்றும் அந்நாட்டு மக்களுக்கும் அந்நாடு நிறுவப்பட்ட 100 ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்கான வாழ்த்துகளைத் தெரிவித்தார்.
- ஐக்கிய அரபு அமீரகமானது ரசீத் (Rashid) எனப்படும் ஒரு சுற்றித் திரியும் ஊர்தியினை (ரோவர்) 2024 ஆம் ஆண்டில் நிலவுக்கு அனுப்ப உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஹேஃப்கைன் நிறுவனம்

- பாரத் பயோடெக் நிறுவனத்திடமிருந்து ஹேஃப்கைன் நிறுவனத்திற்கு தொழில்நுட்பப் பரிமாற்றம் மேற்கொள்வதற்கு இந்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- ஹேஃப்கைன் நிறுவனத்தில் தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய மத்திய அரசானது மஹாராஷ்டிராவிற்கு ஓர் ஆண்டு கால அவகாசமளித்துள்ளது.
- இது இந்தியாவின் பழமையான உயிரி மருந்து ஆராய்ச்சி நிறுவனங்களுள் ஒன்றாகும்.

- இது 1899 ஆம் ஆண்டில் டாக்டர் வால்மெர் மார்டெகாய் ஹேஃப்கைன் அவர்களால் நிறுவப் பட்டது.
- இந்நிறுவனம் சான்ஸ் பெரைல் என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- சான்ஸ் பெரைல் என்பது பம்பாய் ஆளுநரின் ஒரு அலுவல் குடியிருப்பாகும்.
- இது தற்போது மும்பைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இணையதள உள்ளடக்கக் குறியீடு 2021

- பொருளாதார நிபுணர்கள் அடங்கிய புலனாய்வுப் பிரிவானது (EIU - Economist Intelligence Unit) பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து இணையதள உள்ளடக்க குறியீடு 2021 என்ற ஒரு குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இதில் உலகளவில் இந்தியா 49வது இடத்தில் உள்ளது,
- இந்தியாவும் தாய்லாந்தும் இந்த இடத்தை (49வது) பகிர்ந்து கொள்கின்றன.
- இக்குறியீடானது பேஸ்புக் நிறுவனத்தினால் தொடங்கப்பட்டு EIU அமைப்பினால் மேம்படுத்தப் பட்டு உள்ளது.
- இதில் உள்ள முதல் 5 நாடுகள்,
    - ஸ்வீடன்,
    - அமெரிக்கா,
    - ஸ்பெயின்,
    - ஆஸ்திரேலியா மற்றும்
    - ஹாங்காங் ஆகும்.

| Overall rankings | |
|---|---|
| 1st | Sweden |
| 2nd | United States |
| 3rd | Spain |
| 4th | Australia |
| 5th | Hong Kong |

## S-400 டிரையம்ப் SA21 க்ரௌலர்

- வான்வழிப் பாதுகாப்பு அமைப்பான S-400 டிரையம்ப் SA21 க்ரௌலரை இந்தியாவிற்கு வழங்க ரஷ்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது நீண்ட வரம்புடைய நிலப்பரப்பிலிருந்து வானில் உள்ள ஒரு இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையாகும்.
- இந்தப் பாதுகாப்பு அமைப்பை வாங்கிய முதல் நாடு சீனாவாகும்.

- சீனாவையடுத்து சவுதி அரேபியா, இந்தியா, துருக்கி மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் தற்போது இந்த அமைப்பை வாங்கியுள்ளன.

### "எனது உடல் எனது" அறிக்கை

- சமீபத்தில் ஐ.நா.வின் மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA - United Nations Population Fund) 'my body is my own' (எனது உடல் எனது) என தலைப்பிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகை நிலவர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உடல்சார்ந்த சுயஉரிமை மீதான அறிக்கையினை ஐ.நா. வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
- 57 வளர்ந்து வரும் நாடுகளைச் சேர்ந்த பெண்களில் கிட்டத்தட்ட பகுதியளவினருக்கு தங்களது உடல் சார்ந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு உரிமை இல்லை.
- இதனுள் கருத்தடை, உடல்நலம் பேணுதல் (அ) அவர்களின் பாலியல் சார்ந்தவை போன்றவையும் உள்ளடங்கும்.
- 75% நாடுகள் மட்டுமே கருத்தடையை முழுமையாகவும் சமமாகவும் உபயோகிக்க சட்ட ரீதியில் உறுதி செய்துள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்


### இந்தியாவில் பேஸ்புக் நிறுவனத்தின் முதல் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் உற்பத்தி நிலையம்

- இந்தியாவில் 'Clean Max' எனப்படும் ஒரு உள்ளூர் நிறுவனத்திடமிருந்து ஒரு புதுப்பிக்கக் கூடிய ஆற்றலினைப் பெறுவதற்கு பேஸ்புக் நிறுவனம் சமீபத்தில் ஒரு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்தியாவில் பேஸ்புக் நிறுவனத்தின் முதல் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் உற்பத்தி நிலையம் இதுவாகும்.
- இந்நிலையம் கர்நாடகாவில் அமைந்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2021 ஆம் ஆண்டு விஸ்டென் கிரிக்கெட்டெர்ஸின் அல்மெனாக்

- இந்தப் பதிப்பில் 1971 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு பத்தாண்டிலிருந்தும் ஒரு கிரிக்கெட் வீரரின் பெயர் தேர்ந்தெடுக்கப் பட்டு அவருக்குப் பட்டம் சூட்டப்படும்.
  - கபில் தேவிற்கு 1980களின் ODI கிரிக்கெட் வீரர் எனும் பட்டம் வழங்கப்பட்டது.
  - சச்சின் டெண்டுல்கருக்கு 1990களின் ODI கிரிக்கெட் வீரர் எனும் பட்டமும்,
  - முத்தையா முரளிதரனுக்கு 2000களின் ODI கிரிக்கெட் வீரர் எனும் பட்டமும்
  - விராட் கோலிக்கு 2010களின் விஸ்டென் அல்மெனாகின் ODI கிரிக்கெட் வீரர் எனும் பட்டமும் சூட்டப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் வாரியமானது விராட் கோலியினை பத்தாண்டிற்கான ICC ஆண் ODI கிரிக்கெட் வீரர் எனவும் பத்தாண்டின் ICC ஆண் கிரிக்கெட் வீரர் எனவும் அங்கீகரித்துள்ளது.
- இங்கிலாந்தின் ஆல் ரவுண்டரான பென் ஸ்டோக்ஸ் 2020 ஆம் ஆண்டில் விஸ்டெனின் முன்னணி கிரிக்கெட் வீரராகப் புகழ் சூட்டப்பட்டார்.
- மேற்கிந்திய ஆல்ரவுண்டரான கீரன் பொல்லார்டுக்கு உலகின் முன்னணி T20 கிரிக்கெட் வீரர் எனும் பட்டம் வழங்கப் பட்டது.




# முக்கிய தினங்கள்

## உலக சாகாஸ் நோய் தினம் – ஏப்ரல் 14

- இத்தினம் முதன்முதல் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இதனை உருவாக்க 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சுகாதார மன்றத்தின் 72வது கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இந்த நோய் மெதுவாக வளர்வதாலும் அரசியல் ரீதியான பலம் இல்லாத மற்றும் சரியான சுகாதார நலம் இல்லாத ஏழை மக்களையே இது முக்கியமாக பாதிப்பதாலும் இந்நோய் பெரும்பாலும் வெளிக் கொணரப்படுவதில்லை.
- இந்நோய் உலகம் முழுவதும் உள்ள வளர்ந்து வரும் நாடுகளின் குறைந்த


வருமானமுடைய மக்களைப் பாதிக்கும் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய் (Neglected Tropical disease – NTD) என வகைப்படுத்தப் பட்டுள்ளது.

- இத்தினம் உலக சுகாதார அமைப்பினால் குறிப்பிடப்பட்ட 11 அலுவல்சார் உலகளாவிய பொது சுகாதாரப் பிரச்சாரங்களுள் ஒன்றாகும்.
- இந்நோய்க்கு பிரேசில் நாட்டின் டாக்டர் கார்ரஸ் ரிபைரோ ஜஸ்டிதியானோ சாகாஸ் என்பவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இவர் தான் இந்நோயின் முதல் தாக்குதலை 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று கண்டுபிடித்தார்.




## தேசிய தீயணைப்புச் சேவை தினம் – ஏப்ரல் 14

- இந்தத் தினமானது மீட்பு நடவடிக்கையின் போது தீயணைப்பு வீரர்கள் ஆற்றும் மகத்தான துணிவு மிக்க வீரத்தினை நினைவு கூர கடைபிடிக்கப்படுகிறது.
- மும்பை தீயணைப்புப் படையின் தீயணைப்பு வீரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இவர்கள் 1944 ஆம் ஆண்டில் பம்பாய் துறைமுகத்தில் போர்ட் ஸ்டிக்கைன் (Fort Stikine) எனப்படும் கப்பலில் ஏற்பட்ட ஒரு பெரிய தீயினை அணைக்கும் போராட்டத்தில் உயிரிழந்தனர்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "தீயினால் ஏற்படும் ஆபத்துகளைத் தணிப்பதற்காக தீ அணைப்புப் பாதுகாப்பு உபகரணங்களைப் பராமரித்தல்".



## உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் – ஏப்ரல் 15

- "உலகளாவிய இலக்குகள்" எனப்படும் ஐ.நா.வின் நீடித்த மேம்பாட்டு இலக்கினை நோக்கிய முன்னேற்றத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதில் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இத்தினம் முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## உலக கலை தினம் – ஏப்ரல் 15

- இத்தினம் யுனெஸ்கோவின் பங்குதார அமைப்பான சர்வதேச கலை கூட்டமைப்பபு என்ற அமைப்பினால் (IAA - International Association of Art) அறிவிக்கப்பட்டது.
- இத்தினம் முதன்முதலில் 2012 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
- லியோனார்டோ டாவின்சி அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவரது பிறந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இவர் ஒரு இத்தாலிய ஓவியர், சிற்பி, கட்டிடக்கலை வல்லுநர், வரைவாளர், கட்டுரையாளர், பொறியியலாளர் மற்றும் அறிவியலாளர் ஆவார்.
- இவர் உலக அமைதி, கருத்துச் சுதந்திரம் போன்ற பலவற்றின் அடையாளமாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★